தலைப்பு 225 - இலங்கை பொலிஸ் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 225 - இலங்கை பொலிஸின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை பொலிஸின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 யூன் 13 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் இலங்கை பொலிஸிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 செப்டம்பர் 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை பொலிஸின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் இலங்கை பொலிஸினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை இலங்கை பொலிஸினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தினதும்

பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் இலங்கை பொலிஸால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இலங்கை பொலிஸின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு,

தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்க கூற்று

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(i)	இலங்கை பொலிஸின் 33 பிரிவுகளில் பேணிச் செல்லப்பட்ட அரசாங்கத்தின் உத்தியோகத்தர்களின் ‘‘பீ’’ கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி, மற்றும் தனிப்பட்ட மீதிகளின் கூட்டுமொத்தத்திற்கு இடையே ரூபா 34,184,622 இணக்கமின்மை காணப்பட்டது.	2025.03.31 இல் உள்ளவாறு பிரிவு அலுவலகங்களின் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி மற்றும் தனிப்பட்ட கடன் மீதி களின் கூட்டுமொத்தம் ரூபா 33,606,532 வரை குறைத்துக் கொள்வதற்கு முடியுமாக இருந்தது.	வேறுபாடுகளை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	இலங்கை பொலிஸின் 50 பிரிவு அலுவலகங்களுக்குரிய ஊழியர்கள் ஓய்வு பெற்றுச் சென்றமை, சேவையை விட்டுச் சென்ற பதவியணியினர்களின் கடன் மீதியும் தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கின்ற கடன் அறவிடப்படுகின்ற	பிரிவு அலுவலகங்களினால் தனிப்பட்ட மீதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அந்த மீதிகளை சரிசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரிவு அலுவலகங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்	வேறுபாடுகளை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	பதவியணியினரின் முற்பணம் ‘‘பீ’’ கணக்கில் காண்பிக்கப்பட்டதன் காரணமாக 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிக் காணப்படுகின்ற ரூபா 1,131,182,421 கடன் மீதி சரியான தாகும்.	டுள்ளது.	

(ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**	**பரிந்துரைகள்**
(i)	இலங்கைப் பொலிஸிற்கு சொந்தமான 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு காணப்படு கின்ற ரூபா 221,306,567 பெறுமதியான 36 குதிரைகள் மற்றும் 306 நாய்கள் நிலையான சொத்தாக நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றான ஏசீஏ 06 படிவத்தில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	இலங்கைப் பொலிஸிற்கு சொந்தமாகக் காணப்படுகின்ற குதிரைகள் மற்றும் நாய்கள் 2024 இன் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப் படவில்லை. எனினும் 2025 ஆம் ஆண்டின் போது திறையில் இருந்து பெறப் படுகின்ற கணக்கு குறியீட்டின் கீழ் இந்தக் குதிரைகள் மற்றும் நாய்கள் இறுதிக் கணக்கில் உள்ளடக்குவதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது என கணக்காய்விற்கு அறிவிக்கப் பட்டுள்ளது.	நிலையான சொத்துக்களின் பெறுமதியை சரியாக இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ii)	மீளாய்வாண்டின் போது இலங்கைப் பொலிஸ் மூலதன செலவினமாக ரூபா 4,063,859,910 செலவினம் செய்திருந்த போதிலும் மூலதன சொத்துக்களாக ரூபா 499,877,068 மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக மூலதன சொத்துக்கள் ரூபா 3,563,982,482 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2024 ஆம் ஆண்டிற்காக முழுமையாக உள்ளடக்கப் பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 2,003,084,125 ஆகும். எனினும் 2025 ஆம் ஆண்டின் அரச கணக்குகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மூலம் இலங்கை பொலிஸின் சகல கொடுப்பனவுப் பிரிவுகளும் கணக்காளர்கள் மற்றும் விடய உத்தியோகத்தர்க ளுக்காக சொத்துக்கள் முகாமைத்துவம் மற்றும் கணக்கீடு செய்தல் தொடர்பான 02 நாள் பயிற்சியின் பின்னர் இலங்கை பொலிஸிற்கு சொந்தமான இதுவரை கணக்கீடு செய்யப்படாத சொத்துக்கள்	சகல மூலதன செலவினங்களும் சரியாக இனங்கண்டு நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

	மற்றும் நாளாந்தம் கொள்வனவு செய்யப்படுகின்ற சகல சொத்துக்களும் உரிய பிரகாரம் கணக்கீடு செய்வதற்கு திட்டமிடப்பட் டுள்ளதென கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	

(இ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

இலங்கை பொலிஸினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணிச் செல்லப்படா திருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணிச் செல்லப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(i) நிலையான சொத்துக்கள் பதிவேடு		
2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 06/2024 என்ற அரச கணக்குகள் வழிகாட்டியின் 8.1 ஆம் பந்தியின் பிரகாரம் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் நிலையான முடியுளின் மூலம் சொத்துக்கள் பதிவேடு தயாரித்து பேணிச் செல்லப்பட் டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் போது இந்த நிலைமையை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் நிலையான சொத்துக்கள் முடியுளின் மூலம் நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக பேணிச்செல்லப்படல் வேண்டும்.
(ii) பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு		
நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு பேணிச்செல்லப்பட்டி ருக்கவில்லை.	2024 இன் இறுதிக் கணக்கில் இணைப்பு iv இன் கீழ் செலவின விடய இலக்கம் 2001 முதல் 2104 வரை சமர்ப்பிக்கப்பட்டுள்ள கடப் பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தினந்தோறும் பரீட்சிக்கக் கூடிய வகையில் பொறுப்புப் பதிவேடு அந்தப் பொறுப்புக்களின் கீழ் குறிப்பிடப்படல் வேண்டும்.

1.6.2 இணக்கமின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ) இலங்கை பொலிஸின் நிதிக் கூற்றுக்களில் இணைப்பு (iv) படிவத்தில் பொறுப்புக்கள் மீதி ரூபா 163,154,357 ஆக இருந்த துடன் திறைசேரி கணனி அச்சிடல் (SA-92) அறிக்கையின் பிரகாரம் பொறுப்புக்கள் மீதி யொன்று காணப்படாமையால் ரூபா 163,154,357 வேறுபாடு காணப்பட்டது.	2024 CIGAS மூலம் பிரிவு களினால் திறைசேரிக்கு கணக்கு அறிக்கையிடும் போது சமர்ப்பிக்கப்படாத எனினும் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது வெளிப் படுத்தப்பட்ட பொறுப்புக்கள் இறுதிக் கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ளது.	சகல பெறுப்புக்களும் திறைசேரிக்கு அறிக்கையிட்டு திறைசேரி அச்சிடல் குறிப்பு (SA-82) அறிக்கை நிதிக் கூற்றுக்களுடன் இணைக்கப்படல் வேண்டும்.
(ஆ) மீளாய்வாண்டின் போது முற்பணம் “பீ” கணக்கின் ரூபா 2,129,162 மோசடியாக பணம் பெற்றிருந்த போதும் 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றில் நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் கூற்றில் அது தொடர்பாக அறிக்கையிடப் பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் நிதிக்கூற்றுக்களில் தேவையான சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	நிதிக்கூற்றுக்களில் நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் சரியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன என்பதற்கு,

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ) மீளாய்வாண்டில் 05 செலவின விடயங் களுக்காக நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் 25 சதவீதம் முதல் 155 சதவீதம் வரையிலான நிதி ஏற்பாடு அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் 08 செலவின விடயங்களுக்காக நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் 27 சதவீதம் முதல் 84 சதவீதம் வரையிலான நிதி ஏற்பாடு	இந்த நிதி ஏற்பாடு மாதாந்த உணவு மற்றும் தங்குமிட படிகளுக்கு செலுத்துவதற்கு சிக்கன மாக மேற்கொள்ளப்பட்ட தாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	சரியான ஆய்வுகளை மேற்கொண்டு நிதி ஏற்பாடுகளை ஒதுக்குவதற்கு கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

	குறைக்கப்பட்டிருந்தது. திருத்தப்பட்ட நிதி ஏற்பாடுகளில் 15 செலவின விடயங்களில் 25 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான செலவினங்கள் மேற்கொள்ளப்படாமல் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.		
(ஆ)	செலவின விடய இலக்கம் 225-1-1-0-1003 இன் கீழ் ஏனைய படிகள் செலுத்துவதற்காக ஆரம்ப மதிப்பீட்டை விஞ்சி ரூபா 21,707,000,000 நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் மற்றும் ரூபா 9,205,100,000 குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலமும் கூட்டுமொத்தமாக ரூபா 30,912,100,000 மீளாய்வாண்டின் போது மாற்றப்பட்டு ஏனைய படிகள் செலுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டி ருந்தது. அது ஆரம்ப செலவின மதிப்பீட்டில் 92 சதவீதம் ஆகும்.	2024 மார்ச் மாதம் 05 ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மான இலக்கம் அமப/24/0335/626/004 இன் பிரகாரம் இந்த நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட ஒட்டுமொத்த நிதி ஏற்பாடுகள் சிக்கனமாக பயன்படுத்தி சகல சீருடைப் பதவியணி யினருக்காகவும் உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செலுத்துவதற்காக நடவடிக்கை எடுத்ததன் காரணமாக அதற்கான நிதி எற்பாடு வழங்குவதற்கு ஏனைய விடயங்கள் மூலம் சேமிக்கப்படுகின்ற நிதி ஏற்பாடு ரூபா 21,707,000,000 தொகை செலவின விடயம் 1003 இற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட தாக அறிவிக்கப்பட்டுள்ளது.	சரியான ஆய்வுகளை மேற்கொண்டு நிதி ஏற்பாடுகளை ஒதுக்குவதற்கு கவனத்திற் கொள்ளல் வேண்டும்.
(இ)	2021 – 2024 காலப் பகுதியில் இந்திய கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பொலிஸ் திணைக்களத்திற்கு தேவையான வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 17,400 மில்லியன் மொத்தக் கிரய மதிப்பீடொன்றின் அடிப்படையில் மீளாய்வாண்டில் ரூபா 300 மில்லியன் வாகனம் கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.	இந்திய கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட ரூபா 348 மில்லியனுக்கான மதிப்பீடு, வாகன உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்வதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான விண்ணப்பம் பொலிஸ்மா அதிபரால் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மூலம் பரிந்துரை செய்யப் பட்டு 2023.08.23 ஆந் திகதிய வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் மூலம் இந்திய தூவராலயத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதும் இந்திய தூதுவர் அலுவலகத்தின் மூலம் அந்த	உரிய நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல் வேண்டும்.

		கடிதங்களுக்கு பதிலளிக்கப்படாமையினால் இவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.	

3.2 வைப்பு மீதிகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2013 ஆம் ஆண்டின் போது சார்க் பயங்கரவாதம் மற்றும் போதைப் பொருள் குற்றங்கள் அவதா னிக்கும் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக இந்தியாவில் இருந்து வழங்கப்பட்டி ருந்த ரூபா 45,837,000 நன்கொடைத் தொகை யில் சேமிக்கப்பட்ட ரூபா 11,503,191 தொகை உரிய பணிகளுக்காக பயன்படுத்தப்படாமல் வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான மிகுதி வேலைத்திட்ட மும் காணப்படவில்லை.	இந்தத் தொகை பயங்கர வாதத்தை ஒழிக்கும் அவதானிப்பு நிலையத்தில் கணனி முறைமைகளைப் பழுது பார்ப்பதற்காக பயன்படுத்துவதற்கு முன் மொழியப்பட்டுள்ளது. அதற்காக சார்க் மாநாட்டின் அங்கீகாரத்தைப் பெறும் வரை இந்த தொகையை நிறுத்திவைக்க வேண்டி ஏற்பட்டதுடன் அது அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கும் முடியாதிருந்தது.	உரிய நோக்கங் களை அடைந்து கொள்வதற்காக வைப்புக்களை பயன்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	மூன்றாம் தரப்பினருக்கு மீண்டும் செலுத்துவதற்காக வைப்புச் செய்யப்பட்ட பொது வைப்புக் கணக்கில் 2017 ஆம் ஆண்டு முதல் கணக்கீடு செய்யப்பட்டி ருந்த ரூபா 1,187,722 தொகையை உள்ளடக்கி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கைப்பெற்றப் பட்டு அரசுடைமையாக்கப்பட்ட ரூபா 7,084,972 தொகை 2024 திசம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் இவ்வாறு அரசுடைமையாக்கப்பட்ட ரூபா 7,084,972 தொகையைப் பயன் படுத்தி பயங்கரவாத ஒழிப்பு மற்றும் விசாரணைப் பிரிவிற்கு கணனி, அச்சிடல் இயந்திரம் மற்றும் அலுவலக உபகரணங் களைக் கொள்வனவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அதற்காக கௌரவ சனாதிபதியின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதன் பிரகாரம் இதனை அரசாங்கத்தின் வருமானத்தில் செலவுவைக்க முடியாதிருந்த தாக அறிவிக்கப்பட்டுள்ளது.	அரசுடைமை யாக்கப்பட்ட பணம் அங்கீகரிக்கப்பட்ட பணிகளுக்காக பயன்படுத்துதல் வேண்டும்.
(இ)	02 வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்க வேண்டியிருந்த போதிலும் 04 வைப்புக் கணக்குகளில் ரூபா 39,907,333 வைப்புக்கள் தீர்த்து வைக்கப்படாதிருந்த துடன் அதில்	2014 திசம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 39,907,337 தொகை 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்களில் தற்போது எஞ்சிக் காணப்படுகின்ற வைப்புக்களின் பெறுமதி ரூபா	காலாவதியான வைப்புக்களை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைத்தல் வெண்டும்.

05 வருடங்களை விஞ்சிய 02 வைப்புக்களின் பெறுமதி ரூபா 14,620,714 ஆகும்.	37,680,836 ஆகும். அவ்வாறு எஞ்சியிருந்த வைப்புக்களை தொடர்ந்தும் நிறுத்திவைப்பதற்கான காரணம் காண்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே 05 வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் இரண்டினது பெறுமதி முறையே குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ரூபா 1,877,722 கட்டிடப் பிரிவில் ரூபா 66,654 மற்றும் கட்டிட பிரிவில் ரூபா 12,273,133 மீதி தொடர்ந்தும் நிறுத்திவைக்க வேண்டி ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	**குற்றங்கள் அறிக்கையிடல் மற்றும் தீர்வுகளை வழங்குதல்.**		
	மனிதப் படுகொலைகள் மற்றும் கடுமையான காயங்களை ஏற்படுத்தும் குற்றங்கள் ஏற்படுமிடத்து 2019 - 2024 காலப் பகுதியில் முறையே 1373, 1356, 1375, 1482, 2030 மற்றும் 1903 ஆக அறிக்கையிடப்பட்டதுடன் அது முன்னைய ஆண்டினை விட சிறிய அளவில் குறைவாக இருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மனிதப் படுகொலைகள் மேற்கொள்ளல் 16 சதவீதத்தாலும், கடுமையான காயங்கள் ஏற்படுத்துதல் 51 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தது.	இவ்வாறான குற்றங்கள் மேற்கொள்ளப்படுபவர்களை உடனடியாக கைது செய்வதற்காக நாட்டில் சகல பொலிஸ் நிலையங்களினாலும் தொடர்ச்சி யாக நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படுவதுடன் வெளி நாடுகளில் இருந்து குற்றங்களை மேற்கொள் கின்ற குற்றவாளிகளைக் கைது செய்வதற்காக விஷேட செயற் பாடுகள் நடாத்திச் செல்லப் படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	கடுமையான குற்றங்களை குறைத்துக் கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

(ஆ) பெண்களுக்கு எதிரான வன்முறைக் குற்றங்களை அறிக்கையிடல் தொடர்பானது.		
பெண்களுக்கு எதிராக இடம் பெறுகின்ற வன்முறை குற்றத் தொகுதியில் 14 இலங்கை பொலிஸ் இனங்கண்டுள்ளதுடன் அண்மைய 03 ஆண்டுகளில் அதில் மனித கொலைகள் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகம், கடுமையான காயங்களை ஏற்படுத்தல் மற்றும் கடுமையான பாலியல் வன்கொடுமை போன்ற குற்றங்கள் 2022 - 2024 காலப் பகுதியில் 459, 589 மற்றும் 567 ஆக எண்ணிக்கையில் உயர்வொன்று அறிக்கையிடப்பட்டுள்ளது.	பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் துன்புறுத்தல்களைக் குறைப்பதற்காக சமூகத்தில் ஒவ்வொரு தரப்பினருக்கும் அறிவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் இலங்கை பொலிஸில் சிறுவர் மற்றும் மகளிர் பணியத்தால் மேற் கொள்ளப்படுவதாக அறிவிக்கப் பட்டுள்ளது.	பெண்களுக்கு எதிராக இடம் பெறுகின்ற கடுமையான குற்றங்கள் அறிக்கையிடப் படுவதை குறைத்துக் கொள்வதற்கு போதியளவான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ) சிறுவர்களுக்கு எதிராக கடுமையான குற்றங்கள் அறிக்கையிடல் தொடர்பானது.		
சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறு கின்ற கடுமையான குற்றத் தொகுதிகள் 15 இலங்கை பொலிஸ் இனங்கண்டுள்ளதுடன் அதில் மனித கொலைகள் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகம் (16 வயதிற்கு குறைந்த விருப்பத்துடன் மற்றும் விருப்பமில்லாமல்), பெண்கள் துஷ்பிரயோகம் கடுமையான பாலியல் வன்கொடுமைகள் மற்றும் துஷ்பிரயோகம் போன்ற கடுமையான குற்றங்கள் 2022 - 2024 காலப் பகுதியில் முறையே 2821, 2764 மற்றும் 2907 ஆக போதியளவில் அதிகரித்திருந்தது.	சிறுவர்களுக்கெதிரான குற்றங்கள் மற்றும் துன்புறுத்தல்களைக் குறைப்பதற்காக சமூகத்தில் சகல தரப்பினர்களுக்கும் தெளிவுபடுத் தும் நிகழ்ச்சித்திட்டம் இலங்கை பொலிஸின் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தால் மேற்கொள் ளப்படுவதாக அறிவிக்கப்பட் டுள்ளது.	சிறுவர்களுக்கெ திராக இடம் பெறுகின்ற கடுமையான குற்றங்கள் அறிக்கையிடுவதைக் குறைத்துக் கொள்வதற்கு போதியளவான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ) வாகன விபத்து அறிக்கையிடல்		
மீளாய்வாண்டில் மரண ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய 2272 விபத்துக் கள் அறிக்கையிடப்பட்டதுடன் அதில் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2381 ஆக இருந்த துடன் கடுமையான காயங்களுக்கு உட்பட்டவர்களின் எண்ணிக்கை 6762 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மரணத்தை ஏற்படுத்தக் கூடிய	வாகன விபத்துக்களைத் தடுப்பதற்காக உத்தியோகத்தர்கள் வீதி சார்ந்த கடமைகள் தொடர்ச்சியாக ஈடுபடுத்துதல், வீதியை பயன்படுத்துகின்ற பல் வேறு தரப்பினர்களுக்கு அறிவித்தல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்படு வதாக	வாகன விபத்துக்களை குறைத்துக் கொள்ளல் மற்றும் வாகனத் தைப் பயன்படுத்துபவர்களினது ம் பாத சாரிகளினதும் பாதுகாப்பை வழங்குகின்ற சகல நடவடிக்கை களும் எடுத்தல் வேண்டும்.

விபத்துக்கள் 3 சதவீதத்தினாலும் கடுமையான காயங்களுடனான விபத்துக்கள் 10 சதவீதத்தாலும் விபத்துக்களின் மூலம் மரணமடைந்த எண்ணிக்கை 3 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தது.	அறிவிக்கப்பட்டுள்ளது.	
(உ) போதைப் பொருள் குற்றம் அறிக்கையிடல்.		
இலங்கை பொலிஸின் மூலம் கைது செய்யப்படுகின்ற போதைப் பொருள்களான கஞ்சா, அபின், கசீஸ், ஹெரோயின், முபீன், கொக்கெயின், ஐஸ், பாபுல், மாவா, போதைப்பொருள் மாத்திரை, போதைப்பொருள் முத்திரை மற்றும் வலி நீக்கி மாத்திரை போன்ற சம்பவங்களுக்காக வழக்குத் தொடர்தல் 2022 ஆம் ஆண்டின் போது 142,632 உம், 2023 ஆம் ஆண்டின் போது 175,781 உம், மற்றும் 2024 ஆம் ஆண்டின் போது 222,785 உம் ஆக 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2024 இல் சம்பவங்கள் அறிக்கையிடப் பட்டமை 56 சதவீதத்தினால் உயர்வடைந்து காணப்பட்டது.	நாட்டில் சகல பொலிஸ் நிலையங்களையும் தொடர்புபடுத்தி மேற்கொள்ளப்படுகின்ற சுற்றிவளைப்புக்கள் மூலம் போதைப்பொருள் வியாபாரிகளை கைது செய்வதற்காக தொடர்ச்சி யான செயற்பாடுகள் நடாத்தப்பட் டுள்ளது. அவ்வாறே கடல் வழிகள் மூலம் போதைப் பொருள் நாட்டிற்கு கொண்டு வருவதைத் தடுத்தல் மற்றும் வெளி நாடுகளில் இருக்கின்ற போதைப் பொருள் வியாபாரிகளை கைது செய்வதற்காக விஷேட செயற் பாடுகள் தொடர்ந்து நடாத்திச் செல்லப்படுவதாக அறிவிக்கப்பட் டுள்ளது.	போதைப் பொருள் குற்றத்தைக் குறைப்பதற்கு விரைவாக தொடர்ச்சியான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

4.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பினவரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட மொத்த கிரய மதிப்பீடு ரூபா 2,585 மில்லியன் ஆன கனிஷ்ட தரத்தின் உத்தியோகத்தர்களில் விவாகமானவர்களின் உத்தி யோகபூர்வ இல்லம், வெலிகம, ஹொள்ளுப்பிட்டி, மல்லாவி மற்றும் முல்லைத்தீவு பொலிஸ் நிலையங்களை நிர்மாணித்தல் மற்றும் நாரஹேன்பிட்ட பொலிஸ் நிலையங்களின் வேலைகளைப் பூர்த்தி செய்தல் தாமதமடைந்த	இந்த நிர்மாணங்கள் கால தாமதம் ஏற்பட்டுள்ளது. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களிலும் இதற்காக விசேட கவனம் செலுத்தப்படுகின்ற விடயமாகும். அதனால் இந்த ஆண்டில் மிகுதி வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்	செயற்திட்ட நோக்கங்களை நிறைவேற்று வதற்குத் தேவையான நடவடிக்கைகள் காலதாமதமின்றி எடுக்கப்படல் வேண்டும்.

06 செயற்திட்டங்களுக்காக 2024 ஆம் ஆண்டில் ரூபா 387 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் செலவினம் ரூபா 309 மில்லியன் ஆகும். மோட்டார் வாகன தலைமையகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் போது எந்தவொரு நிதி ஏற்பாடும் மேற்கொள்ளப்பாதிருந்ததுடன் தாமதமான இந்த 06 செயற்திட்டங்களின் தற்போதைய செயல் முன்னேற்றமும் மந்த கதியில் காணப்படுகின்ற மையால் செயற் திட்டமும் மந்த கதியில் காணப்பட்டமையாலும் செயற்திட்டத்தை ஆரம்பித்த நோக்கத்தை நிறைவேற்றுதலில் மேலும் தாமதமடைந்து காணப்பட்டது.	பட்டுள்ளது.	

4.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	இலங்கை பொலிஸின் பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் கொஸ்தாபல் பதவிகளுக்காக Peak Cap 75,000 அமெரிக்க டொலர் 414,000 (CIF) பெறுமதியில் (ரூபா 93,455,119 வரி மற்றும் சகல உள்நாட்டு செலவினங்களும் உள்ளடங்கி) வழங்குவதற்காக 2010 ஆம் ஆண்டின் போது பாதுகாப்பு அமைச்சினால் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொண்டு 2011 பெப்ரவரி 11 ஆந் திகதி ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. 2011 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வழங்கல் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டதன் காரணமாக பிணக்குகள் தீர்க்கும் சபைக்காக அனுப்பப்பட்டிருந்தது. வழங்குநரின் களஞ்சியக் கட்டணம், சட்டக் கட்டணம் மற்றும் தாமதமடைந்ததன்	இந்த Peak Cap இருப்பு 2023 ஆம் ஆண்டின் போது பொலிஸிற்கு வழங்க வேண்டி ஏற்பட்டதுடன் அந்தப் Peak Cap 2023/2024 ஆண்டுகளின் போது உத்தியோ கத்தர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக் கப்பட்டுள்ளது.	பெறுகை செயற்பாடுகள் தொடர்பாக சரியான அனுபவமுடன் நடவடிக்கை எடுத்து பொது மக்களின் நிதி யில் இடம் பெறுகின்ற இழப்பீட்டை முழுமையாக தடுப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	அடிப்படையில் வட்டி மற்றும் அந்நியச் செலாவணி விகிதம் அதிகரித்ததனால் பாதகமும் இலங்கை பொலிஸிற்கு செலவிட வேண்டி ஏற்பட்டிருந்ததுடன் சமசர தீர்ப்பின் பிரகாரம் Peak Cap 60,000 பெற்றுக் கொள்வதற்காக ரூபா 289,138,812 இலங்கை பொலிஸினால் செலுத்தப்பட்ட துடன் இது நிராகரிக்கப்பட்ட மையால் அரம்பத்தில் இணங்கப்பட்ட விற்பனை விலையினை விட ரூபா 195.7 மில்லியன் மேலதிகமாக செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. இந்த வழங்கல்க ளுக்காக 12 வருட காலம் அளவில் எடுத்திருந்ததுடன் அவற்றின் தரத் தன்மை தொடர்பாக பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தமையால் ரூபா 28.07 மில்லியன் பெறுமதியான கெப் அளவொன்று பயன்பாட்டிற்கு பொருத்தப் பட்ட நிலைமையில் எஞ்சி இருந்தது.		
(ஆ)	அரசாங்க ஊழியர்களுக்கு வீடுகளை வழங்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட ஹபராதுவ ‘‘நிலசெவன’’ உத்தேச திட்டத்தின் வீடொன்று ரூபா 3.8 மில்லியன் வீதம் ரூபா 729.6 மில்லியனுக்கு 192 வீடுகளைக் கொள்வனவு செய்வதற்கு 2017 திசம்பர் 29 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத் திட்டு 2019 ஏப்ரல் 02 ஆம் திகதி வரையில் ரூபா 500 மில்லியன் முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் வீட்டைக் கையேற்பதற்கோ அல்லது செயற்திட்டத்தில் எந்தவொரு வீடொன் றையும் பொலிஸ் உத்தியோகத்தருக்கு வழங்குதலோ மேற்கொள்ளப்பட வில்லை. 128 வீடுகள் மாத்திரம் கையேற்பதற்கு முன்மொழியப் பட்டு இறுதி இணக்கப்பாடு ஏற்படுத்தப்ப டாதிருந்ததுடன் ரூபா 486,400,000 ஆன அந்த 128 வீட்டு அலகுகளுக்காக ரூபா 500,000,000	இந்த வீட்டு செயற்திட்டத் திற்குரிய கையளித்தல் உரித்துறுதி கையளிக்கப் படுவதாக அறிவிக்கப்பட் டுள்ளது.	செலுத்தப்பட்ட அரசாங்கத்தின் பணத்திற்காக வீடமைப்பு செயற் திட்டத்தை கையேற்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த துடன் மேலதிக மாக செலுத்தப் படுகின்ற தொகை உடனடியாக மீள அறவிடப்படல் வேண்டும்.

செலுத்தப்பட்டமையால் ரூபா 13,600,000 அரசாங்கத்திற்குரிய தொகை வெளித்தரப்பினருக்கு 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் நிறுத்திவைப்பதற்கு சந்தர்ப்பம் அளித்ததன் மூலம் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டிருந்தது.

4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2006 ஆம் ஆண்டின் போது நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு நகர மோட்டார் போக்குவரத்து பிரிவில் தங்குமிட கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2024 ஒக்டோபர் மாதம் வரையில் இணங்கப்பட்ட பெறுமதியில் 61 சதவீதம் அதாவது ரூபா 237,731,881 தொகை ஒப்பந்தகாரருக்கும், ரூபா 8,797,704 ஆலோசனை சேவை நிறுவனத்திற்கும் செலுத்தப்பட்டிருந்த போதும் நிர்மாணங்களின் பௌதீக செயல் முன்னேற்றம் 46 சதவீதம் மாத்திரம் ஆக இருந்தது. 2021 ஆம் ஆண்டு முதல் நிர்மாண நடவடிக்கைகள் கைவிடப்பட்ட இந்த வணிக நீதிமன்றத்தில் வழக்கு தீர்ப்பின் பிரகாரம் நிர்மாணக் கம்பனி கலைக்கப்பட்டதன் காரணமாக முறையான பிரகாரம் நிர்மாணம் செய்யப்படாமையால் பொறுப்புக்கள் ஒப்பந்தகாரருக்கு கையளிக்க முடியாதிருந்தது.	கட்டிட நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏனைய ஒப்பந்தகாரருக்கு 2025 ஆம் ஆண்டின் போது கையளிக்கப்பட்டுள்ளது.	நிர்மணப் பணிகள் ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை மிகவும் சிறந்த மேற் பார்வையின் கீழ் மேற்கொண்டு நிர்மாணத்தின் மூலம் எதிர்பார்க்கப் படுகின்ற நோக்கங்களை கால தாமதமின்றி நிறைவேற்று வதற்காக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2016 ஆம் ஆண்டில் ரூபா 89,794,190 பெறுமதியில் வேலை ஆரம்பிக்கப்பட்ட வெலிகம பொலிஸ் நிலையத்தின் நிர்மாண நடவடிக்கை காலத்தை நீடிப்பதை உள்ளடக்கி 2019 பெப்ரவரி 06 ஆம் திகதி வரையில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்ய	இந்த செயற்திட்டத்தின் நிர்மாண ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட நிறுவனம் குறித்துரைத்த காலத்தில் செயற் திட்டத்தின் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்வதற்கு தவறியதன் காரணமாக மிகுதி	ஒப்பந்தகாரர் மூலம் குறித்துரைத்த காலத்தில் நிர்மாணங்களை பூர்த்தி செய்து கொள்வதற்காக சகல நடவடிக் கைகளும் எடுத்தல்

	வேண்டியிருந்த போதிலும் 2025 சனவரி மாதம் வரையில் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாதிருந் ததுடன் அதற்காக 2019 ஏப்ரல் 29 ஆம் திகதி வரையில் ரூபா 64,664,752 தொகை யும் செலுத்தப்பட்டிருந்தது.	வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக புதிய ஒப்பந்தகாரருக்கு 2025 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டுள்ளது.	வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டின் திசம்பர் வரையில் இலங்கை பொலிஸில் 80 பொலிஸ் அலுவலகங்கள், 121 பொலிஸ் நிலையங்கள், 15 பொலிஸ் காவலரன்கள், உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் 106 பொலிஸ் விடுதிகள் மற்றும் 09 களஞ்சியங்கள் நடாத்திச் செல்வதற்காக 331 கட்டிடங்கள் வாடகை செலுத்தும் அடிப்படையில் பெறப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக கட்டிட வாடகையாக ரூபா 738,006,713 செலுத்தப்பட்டிருந்தது. அதில் மாதமொன்றுக்கு ரூபா 10,400,000 வீதம் ஆண்டிற்காக ரூபா 124,800,000 செலுத்தி இலங்கை பொலிஸின் சட்ட விரோத சொத்துக்கள் மற்றும் ஆதனங்கள் புலனாய்வுப் பிரிவு, பயங்கரவாத ஒழிப்பு மற்றும் விசாரணைப் பிரிவு, நபர்களின் போதைப்பொருள் வியாபார சுற்றிவளைப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்பு பிரிவு மற்றும் மனிதப் படுகொலைகள் மற்றும் ஒழுங்க மைக்கப்பட்ட குற்றவிசாரணைப் பிரிவு நடாத்திச் செல்வதற்காக கொழும்பு 05 பிரதேசத்தில் தனியார் கம்பனிக்குரிய கட்டிடமொன்றும் ஆகும்.	இலங்கை பொலிஸின் கட்டிட தேவையினை உரிய பிரகாரம் இனங் கண்டு நீண்டகால திட்டத்தின் பிரகாரம் நிர்மாண நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்ட போதும் உரிய செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்படு வரையறுக்கப்பட்ட மையால் நிர்மாண வடிக்கைகளை மேற் கொள்ளும் பிரச்சினைகள் எழுந்த மையால் நிர்மாண நடவடிக்கைகளுக்காக காலம் எடுத்திருந்தது என்பதை அறியத் தருகின்றோம்.	வேலைகள் ஆரம்பிக்கப்படுகின்ற நிர்மாணங் களை விரைவாக பூர்த்தி செய்து உரிய பிரிவுகளின் அந்த நிலையங்களை ஸ்தாபித்தல் மற்றும் கட்டிடத் தேவையினை உரிய பிரகாரம் இனங்கண்டு நீண்ட காலத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டிற்காக ரூபா 4,270,000 செலவில் 1931 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடம் கிரேன்பாஸ் பொலிஸ் நிலையம் நடாத்திச் செல்லப்படுகின்ற போதும் பொருத்தமான நிலையம் இலங்கை பொலிஸிக்காகவும் கட்டிடம் ஒன்றை நிர்மாணித்து	இந்தக் கட்டிடம் கைப் பெற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து கொழும்பு மறைமாவட்ட ஆயரால் மேற் கொள்ளப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் உரிய நடவடிக்கைகள் கைவிடப்பட்டுள்ளது. இந்த பிரதேசத்தில்	நீண்ட கால ரீதியில் இவ்வாறான நிலையங்களுக்காக மாற்று அரசாங்கத்தின் காணி தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும்.

	இந்த பொலிஸ் நிலையத்தில் அதை ஸ்தாபிப்பதற்கு இலங்கை பொலிஸிற்கு முடியாதிருந்தது.	அரசாங்கத்திற்குச் சொந்தமான கட்டிட மொன்று அல்லது காணியொன்று தொடர்பாக ஆராயப் படுகின்றது.	
(உ)	இங்கிரிய சேவைப் பயிற்சி பிரிவு மற்றும் இங்கிரிய பொலிஸ் நிலையம் நிர்மாணிப்பதற்காக 2008 ஆம் ஆண்டில் வேலை ஆரம்பிக்கப்பட்டு ரூபா 8.8 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாண நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்தப் பட்டிருந்தது.	04 ஏக்கர் 02 றூட் 7.2 பேர்ச் அளவான இந்தக் காணி இலங்கை பொலிஸிற்கு இங்கிரிய பிரதேச செயலாளரால் 2024.02.21 ஆந் திகதி கையளிக்கப்பட்டுள்ள தாக அறிவிக்கப்பட் டுள்ளது.	நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	பொலிஸ் குதிரைப்படைப் பிரிவு மற்றும் பொலிஸ் படைவீரர் பாதுகாக்கும் நிலையம் ஸ்தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட 75 ஏக்கர் அளவான ஹொரண எல்லக்கந்த வத்த காணி 2024 திசம்பர் 31 ஆந் திகதி வரையில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கைப்பற்றுவதற்கு ஆரம்ப நில வரைபடம் தயாரிக்கப் படுகின்றது.	காணியை கூடிய விரைவில் கையேற்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**	**பரிந்துரை**
இரண்டாம் நிலையில் மனிதப் படுகொலைக ளுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் போது 15 பொலிஸ் உத்தியோகத் தர்கள் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தனர். பின்னர் அவர்களின் வாழ்க்கைத் துணைவியினால் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் 2022 பெப்ரவரி 25 ஆம் திகதிய கட்டளையின் பிரகாரம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மூன்று பேர்களின் வாழ்க்கைத் துணைக்கு கூட்டுமொத்தமாக ரூபா 4,741,056 அரைவாசி சம்பளமாக 2023 நவம்பர் வரையும் செலுத்தப் பட்டிருந்தது. இந்த இரண்டாம்	இர்ணடாம் மனிதப் படுகொலைகளுக்குரிய தாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப் பட்ட விடயங்களின் அடிப்படையல் கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்படுகின்ற அரைவாசி சம்பளம் தொடர்பான தகவல்கள் மற்றும் இரண்டாம் கொலைக்குரிய பரிசோதனை மற்றும் நீதிமன்ற நடவடிக்கை களின் தற்போதைய செயல் முன்னேற்றத் தைப் பரீட்சித்து வழங்கு வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது.	நீதிமன்ற தீர்ப்பு வழங்கும் வரை செலுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளா திருத்தல் வேண்டும்.

	நிலை கொலைக்குரிய பரிசோதனைகள், நீதிமன்ற நடவடிக்கைகள் தற்போதை செயல் முன்னேற்றம் மற்றும் ஏனைய உத்தியோகத் தர்களுக்கு செலுத்தப்பட்ட அரைவாசி சம்பளம் தொடர்பாக பரிசோதனைகள் செயல் முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு அறிக்கையிடல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை. அவ்வாறே சந்தேக நபர்களாக விசாரணையின் மூலம் இனங்காணப்பட்ட உத்தியோகத்தர்களின் வாழ்க்கைத் துணைவிக்கு நீண்ட கால அடிப்படையில் அரைவாசி சம்பளம் செலுத்துதல் தவறாக எழுந்திருந்தமை கணக்காய்வின் போது புறந்தள்ளமுடியாதிருந் தது.		

4.6 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**	**பரிந்துரைகள்**
(அ)	மீளாய்வாண்டி இறுதி வரையில் 1,376 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 39,300,176 ஆக இருந்ததுடன் அந்த கடன் மீதியில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து நிலுவையாக இருந்த கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 39,300,176 ஆகும்.	நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற் காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ள துடன் அந்தக் குழுவின் மூலம் பிரிவு அலுவலகங்களில் நிலுவைக் கடன் மீதி விபரங்கள் பெறப்பட்டு அதன் பிரகாரம் நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு பிரிவுகளில் நடவடிக்கை எடுக்கப் படுகின்றது.	நிலுவைக் கடனை அறவிடுவதற் காக உரித்தான சகல நடவடிக்கை களும் எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	நேரடி வீடியோ கண்காட்சிகளைப் படம் பிடித்து தெரியப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், வீதி சட்டங்களை மீறல் களை அவதானித்தல் மற்றும் கொழும்பு நகரத்தில் மோட்டார் போக்குவரத்து பிரயா ணங்களை	இந்த கெமரா முறைமைக்காக 14 வருட காலம் கடந்திருந்தமையினால் செயலழிந்த கெமராக்களை மீண்டும் புதுப்பிக்க முடியாதிருந்த அதனால் 2025 ஆம் ஆண்டின் போது நவீன	இந்த கெமரா முறைமையை நவீன தொழில்நுட் பத்தில் நாளதுவரை யாக்கி உடனடி காட்சிகளை வலுப்படுத்துதல்

	கட்டுப்படுத்துதல், கொழும்பு நகரத்திற்கு வருகை தருகின்ற மற்றும் கொழும்பு நகரத்தில் வாழ்கின்ற மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் போன்ற அதிவிசேட பணிகளை நிறைவேற்றும் நோக்கில் கொழும்பு நகரத்தில் 33 பிரதான நிலையங்களில் 108 கெமராக்கள் ஸ்தாபிக் கப்பட்ட போதிலும் 2024 ஆகஸ்ட் வரையிலும் அதில் 06 இடங்களில் முழுமையாக உள்ளடக்கிய 23 இடங்களில் 37 கெமராக்கள் செயலிழந்து காணப்பட்டது.	தொழில்நுட்பத்தை நாளதுவரையாக்கும் முன்மொழிவு மற்றும் மதிப்பீடுகள் தயாரித்து தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படு வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	வேண்டும்.
(இ)	கெமரா முறைமையை ஆரம்பிக்கப்பட்ட காலம் வரை கணனி செயற்பாட்டு முறைமை (OS) ஆக பயன்படுத்தப்பட்ட Windows XP ஈடுபடுத்தல் பயன்படுத்தி செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டதுடன் 2014 ஆம் ஆண்டின் பின்னர் மைக்ரோ சொப்ட் நிறுவனம் Windows XP இற்காக வழங்குகின்ற வசதிகள் நிறுத்தப் பட்டிருந்த போதிலும் 2024 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரையிலும் கெமரா முறைமை Windows XP ஈடுபடுத்தல் மூலம் செயற் படுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு மிகவும் பழைய தொழிலநுட்பத்தைப் பயன்படுத்தி யதன் காரணமாக மெகரா முறைமையை பேணிச் செல்வதற்காக அதிக வசதியீனத்திற்கு உட்பட்டிருந்ததுடன் புதிய தொழில்நுட்பத்தை ஈடுபடுத்தும் தேவை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	இந்த CCTV கெமரா முறைமையின் நவீன மயப்படுத்தி அபிவிருத்தி செய்வதற்கு 2025 ஆம் ஆண்டின் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கிக் கொள்வதற்கும், மற்றும் நவீன தொழில் நுட்பத்தின் நாளதுவரையாக்கு வதற்கான முன்மொழிவு மற்றும் மதிப்பீடொன்று தயாரித்து உரிய நிர்மாண நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	கணனி செயற்பாடுகள் முறைமையை புதிய தொழில் நுட்பத்திற்கு நாளதுவரையாக் குதல் வேண்டும்.
(ஈ)	1865 இன் 16 ஆம் இலக்க பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் திருத்தும் தேவை யின் பிரகாரம் திருத்தங்கள் மேற்கொள்ளப் படவேண்டிய 16 துறைகளும் 2014 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்டிருந்தது. தற்போதைய மற்றும் எதிர்கால	சட்ட வரைவு வழங்கல் அமைச்சினால் பொலிஸின் அவதானிப்புக்களை பெற்ற பின்னர் இறுதி வரைவு தயாரித்து பூர்த்தி செய்யப்பட்டுள் ளது.	அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் 1865 இன் 16 ஆம் இலக்க பொலிஸ் கட்டளைச் சட்டம் திருத்தப்படல் வேண்டும்.

சமூகம் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி தேவை களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் நாளதுவரையாக்கப்பட்ட திருத்தங்களுக்காக 2014 நவம்பர் 19 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத் திருந்த போதிலும் 2025 ஆம் ஆண்டு வரையிலும் சட்ட திருத்தம் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

05. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**	**பரிந்துரைகள்**
(அ)	பொலிஸ் பிரிவு மற்றும் பொலிஸ் நிலையங்களின் கடமைகளின் தன்மை தொடர்பாக ஆய்வு செய்த பின்னர் குறித் துரைத்த ரீதியில் இனங்காணப்பட்ட அங்கீகரிக்கப் பட்ட பதவியணி யொன்று காணப்படாமையின் அடிப்படையில் அந்தப் பிரிவுகள் மற்றும் பொலிஸ் நிலையங்களில் வெற்றிடங்கள் காணப்பட்டமையும், மிகை காணப் பட்டமையும் போன்ற விடயங்களில் குறித்துரைத்த ரீதியில் வெளியிட முடியா திருந்தது. இந்த நிலைமையில் பதவியணி யினர் நிலையத்தில் அமர்த்துவதற்கு உரிய திட்ட முறைமையொன்றில் இன்றி அமுல்படுத்தப்பட்டிருந்தது.	இது தொடர்பாக ஆய்வினை மேற்கொண்டு அங்கீ கரிக்கப்பட்ட பதவிய ணியை அதிகரித்துக் கொள்வதற்கு முடியுமாக இருந்த போதிலும் பிரிவுகள், பொலிஸ் நிலையங் களில் தேவையான பதவியணி யினரை இனங்காண் பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப் படுவதுடன் இலங்கை பொலிஸிற்குரிய சீருடை பதவியணியில் காணப்படுகின்ற பதவி யணியினர்களின் பற்றாக்குறையினால் அதனை பூர்த்தி செய்வதற்கு முடியா திருந்ததாக அறிவிக்கப்பட் டுள்ளது.	பொலிஸ் பிரிவு மற்றும் பொலிஸ் நிலையங்களின் கடமை தன்மை தொடர்பாக ஆய்வினை மேற்கொண்ட பின்னர் குறித் துரைத்த ரீதியில் இனங்காணப் பட்ட பதவியணி யினரை நியமித்தல் வேண்டும்.
(ஆ)	பொலிஸ் கொஸ்தாபில் பதவியில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 60,000 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டில் இறுதியில் உள்ள படியான எண்ணிக்கை 30,983 மாத்திரம் ஆனதன் அடிப்படையில் வெற்றிடங்கள் 29,017 ஆகக் காணப்பட்டது. இவ்வாறு பொலிஸ் கொஸ்தாபில் பதவியில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையில் 30 சதவீத அளவு கணிசமான வெற்றிடமொன்று காணப்பட்டமை, இலங்கை பொலிஸின்	2024 ஆம் ஆண்டில் பொலிஸ் கொஸ்தாபில் பதவிக்காக 400 பேர்களைச் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட துடன் 2025 சனவரி மாத்தின் போது 1,825 பொலிஸ் கொஸ்தாபில்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக் கைக்குரிய வெற்றிடங்களை நிரப்புதல், பதவி உயர்வு வழங்குதல் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

	அத்தியவசிய பொது மக்கள் சேவையினை நிறைவேற்றுவதற்கும் இடையூறாக இருந்தது.		
(இ)	பெண் பொலிஸ் கொஸ்தாபில் பதவியில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 10,000 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான எண்ணிக்கை 5,973 மாத்திரமாக இருந்ததன் அடிப்படையில் வெற்றிடங்கள் 4,027 ஆகக் காணப் பட்டது. இவ்வாறு பெண் பொலிஸ் கொஸ்தாபில் பதவியில் அங்கீகரிக் கப்பட்ட எண்ணிக்கையில் 34 சதவீதம் ஆன கணிசமான வெற்றிட அளவு காணப்பட்டமை, இலங்கை பொலிஸின் அத்தியவசிய பொது மக்கள் சேவைகளை நிறைவேற்றுவதிலும் தாக்கமளித்திருந்தது.	புதிய ஆட்சேர்ப்புக்களை மேற் கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	அங்கீகரிக்கப் பட்ட எண்ணிக்கைக் குரிய வெற்றிடயங் ககை நிரப்புதல், பதவி உயர்வுகளை வழங்குதல் மேற்கொள்ளப் படல் வேண்டும்.
(ஈ)	இலங்கை பொலிஸின் உதவி சேவையில் சிரேஷ்ட நிலையில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 104 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டில் உள்ளபடியான எண்ணிக்கை 07 ஆனதன் அடிப்படையில் வெற்றிடங்கள் 97 ஆகக் காணப்பட்டது. இவ்வாறு பொலிஸ் உதவி சேவையின் சிரேஷ்ட நிலையில் வெற்றிடயங்கள் 93 சதவீதம் காணப்பட்டமை இலங்கை பொலிஸின் பணிகளை நடாத்திச் செல்வதற்கு இடையூறாக இருந்தது.	ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்ட பின்னர் தேவையான ஆட்சேர்ப்புக்கள் எதிர்காலத்தில் மேற்கொள் வதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது.	உதவி சேவைக் குரிய பல்வேறு பதவிகளின் பெயர்களுக்காக ஆட்சேர்த்தல் மற்றும் பதவி உயர்வு நடை முறைகளை விரைவாக அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.